**செய்தி வெளியீடு எண்: 127** **நாள்: 14.02.2020**

**<u>பொதுத் (தேர்தல்கள்–1) துறை</u>**

## <u>செய்தி வெளியீடு</u>

01.01.2020–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2020–ன் இறுதி வாக்காளர் பட்டியல்கள் இன்று (14.02.2020) வெளியிடப்பட்டுள்ளன.

2. 01.01.2020–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 23.12.2019 அன்று வரைவுப் பட்டியல் வெளியீட்டுடன் தொடங்கியது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க/நீக்க/திருத்த/இடம் மாற்றம் செய்ய விண்ணப்பங்கள் 23.12.2019 –ஆம் தேதியிலிருந்து 22.01.2020–ஆம் தேதிவரை பெறப்பட்டன.

3. மேற்கண்ட சிறப்பு சுருக்கமுறை திருத்த காலத்தின்போது வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்காக 14,65,890 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 14,02,464 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன. பெயர் நீக்கலுக்காக 1,18,681 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இடப்பெயர்ச்சி, இறப்பு மற்றும் இரட்டைப் பதிவு ஆகிய காரணங்களுக்காக 97,155 பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

4. பதிவுகளில் திருத்தங்கள் செய்யக்கோரி 1,78,409 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றில் 1,22,817 ஏற்கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் முகவரி மாற்றம் செய்யக்கோரி 1,14,790 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 90,943 ஏற்கப்பட்டு உரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

5. 2020–ஆம் ஆண்டு சிறப்பு சுருக்க முறைத் திருத்தத்தின் இறுதி வாக்காளர் பட்டியல்களின்படி தமிழ்நாட்டில் 6,13,06,638 வாக்காளர்கள் (ஆண் வாக்காளர்கள் 3,02,54,172; பெண் வாக்காளர்கள் 3,10,45,969 மற்றும் மூன்றாம் பாலினத்தவர் 6497 பேர்) பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

6. மேலும், இறுதி வாக்காளர் பட்டியல்களின்படி, 27-சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி தமிழ்நாட்டிலேயே அதிக வாக்காளர்களைக் கொண்டுள்ளது. இத்தொகுதியில் மொத்தம் 6,60,317 வாக்காளர்கள் உள்ளனர். (ஆண்கள் 3,31,996; பெண்கள் 3,28,232; மூன்றாம் பாலினத்தவர் 89).

7. தமிழ்நாட்டிலேயே குறைந்த அளவு வாக்காளர்கள் கொண்ட தொகுதியாக 18–துறைமுகம் சட்டமன்றத் தொகுதி உள்ளது. இத்தொகுதியின் மொத்த வாக்காளர்கள் 1,73,337 ஆவர். (ஆண்கள் 90,333; பெண்கள் 82,952; மூன்றாம் பாலினத்தவர் 52).

8. வெளிநாடுவாழ் வாக்காளர்கள் 16 பேரின் பெயர்களும் வாக்காளர் பட்டியல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

9. 2020–ஆம் ஆண்டு சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்தில் 18-19 வயதுள்ள 5,85,580 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஆண்கள் 3,22,167; பெண்கள் 2,63,213; மூன்றாம் பாலினத்தவர் 200)

10. வாக்காளர் பட்டியல்களை, தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளமான http://elections.tn.gov.in என்ற வலைதளத்திலும் காணலாம். அதில் தங்கள் பெயரைச் சரிபார்க்கலாம்.

11. வாக்காளர் பட்டியல் தொடர் திருத்த நடைமுறை தற்போது செயல்பாட்டிலுள்ளது. 01.01.2020 அன்று 18 வயது நிரம்பிய தகுதியுள்ள நபர்கள் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாமல் இருந்தால், கீழ்க்கண்ட முறைகளில் விண்ணப்பிக்கலாம் :-

1. வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்தில் படிவம் 6–ஐ சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம்.

2. இணையம் மூலமாக www.nvsp.in என்ற வலைதளத்திலும் விண்ணப்பிக்கலாம்.

3. கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து 'Voter Helpline App" செயலியைத் தரவிறக்கம் செய்து அதன்மூலம் விண்ணப்பிக்கலாம்.

12. இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி, மாவட்ட தொடர்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட தொடர்பு மையங்களை "1950" என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். பொதுமக்கள் இம்மையங்களைத் தொடர்பு கொண்டு தேர்தல் தொடர்பான தகவல்களை அறியலாம். தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் 180042521950 என்ற கட்டணமில்லாத் தொலைபேசி எண்ணுடன் மாநிலத் தொடர்பு மையம் இயங்கி வருகின்றது.

**தலைமை தேர்தல் அதிகாரி**

**தமிழ்நாடு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**